# பொருளியல்

## க.பொ.த உயர்தரம்

# கருத்திரங்கு

தொடர் - 07

## 2016

**தேர்ச்சி - 10 :** பொருளாதார வளர்ச்சி

**தேர்ச்சி - 11 :** சுதந்திரத்தின் பின்னரான இலங்கைப் பொருளாதாரம்

- சிறு குறிப்புக்கள்
- மாதிரி வினா விடைகள்
- புள்ளித்திட்ட விளக்கம்
- பல்தேர்வு வினாக்கள்


## S.Jeyakumar

(B.A(Hons) ECO SPI, M.A.in Eco, P.G.D.E)

யா/வயாவிளான் மத்திய கல்லூரி

# பொருளாதார வளர்ச்சி

## பொருளாதார வளர்ச்சி

- ஒரு நாட்டின் மெய்வெளியீட்டில் அல்லது சாத்தியவளவெளியீட்டில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சி எனப்படும். அதாவது ஒரு பொருளாதாரத்தின் மொத்த மெய் தேசிய உற்பத்தி / மெய் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பை பொருளாதார வளர்ச்சி என்பர்.
- நீண்டகாலப் போக்கில் (பொதுவாக 10 வருடங்கள்) உற்பத்தியின் மெய்ரீதியான மாற்றமே பொருளாதார வளர்ச்சி எனப்படும். இது ஒரு நாட்டின் பொருட்கள், சேவைகள் என்பவற்றின் உற்பத்தியில் தொகை ரீதியாக ஏற்படும் அதிகரிப்பை குறிக்கின்றது.
- பொருளாதார வளர்ச்சி என்பது நாட்டின் உற்பத்தி இயலளவில் ஏற்படும் அதிகரிப்பினை குறிக்கின்றது. உற்பத்தி சாத்திய வளையியின் வலப்புற நகர்வின் மூலம் பொருளாதார வளர்ச்சி காட்டப்படும்.

## பொருளாதார வளர்ச்சி வீதம்

குறிப்பிட்ட இருகால இடைவெளியில் மெய்ரீதியான மொத்த தேசிய உற்பத்தி / மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பின் நூற்றுவீதமே பொருளாதார வளர்ச்சி வீதமாகும். நேர்கணிய பொருளாதார வளர்ச்சி வீதமே விரும்பப்படும். நிலையான விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது மொத்த தேசிய உற்பத்தி மூலம் இது அளவிடப்படும்.

$$\text{பொருளாதார வளர்ச்சி வீதம்} = \frac{\text{குறிப்பிட்ட வருட மெய் மொ.உ.உற்பத்தி} - \text{முந்திய வருட மெய் மொ.உள்.உற்பத்தி}}{\text{முந்திய வருட மெய் மொ.உ.உற்பத்தி}}$$

உ+ம் : மெய்ரீதியான மொத்த உ.உ/தி 2013ல் = 7846202 MR

2014ல் = 8228986 MR

$$= \frac{382784}{7846202} \times 100$$

2014ல் மொத்த பொருளாதார வளர்ச்சி வீதம் = 4.87%

### பொருளாதார வளர்ச்சி வீதத்தின் முக்கியத்துவம்

1. ஒரு நாட்டின் உற்பத்தி / வருமானத்தில் ஏற்படும் மாற்றங்களை அறிய உதவும்.
2. மக்களின் வாழ்க்கைத்தர முன்னேற்றத்தை அறிதல்.
3. நாட்டின் தனிநபர் உற்பத்தியில் ஏற்படும் மாற்றத்தினை அறிதல்.
4. தேசிய உற்பத்தியின் இரட்டிப்பு காலத்தை அறிய உதவும்.
   (70 / பொருளாதார வளர்ச்சி வீதம்)
5. அரசின் திட்டமிடலுக்கு அவசியமானது.
6. சர்வதேசரீதியில் நாடுகளை ஒப்பீடு செய்வதற்கு உதவும்.

**சாத்திய வள வெளியீடு அல்லது நிறைதொழில் மட்ட வெளியீடு**

- குறித்த நாடொன்று தன்னிடமுள்ள சகல வளங்களையும் முழுமையாகவும் பொதுவான பயன்பாட்டு வீதத்திலும் பயன்படுத்தி அதிகரிக்கும் பணவீக்க அழுத்தத்தை ஏற்படுத்தாத வகையில் பெற்றுக்கொள்ளக்கூடிய வெளியீட்டு மட்டத்தை சாத்தியவள வெளியீடு என்பர்.
- இதனை உற்பத்தி சாத்திய வளையி வெளிக்காட்டும்.

**உண்மை வெளியீடு**

- பொருளாதாரம் ஒன்றில் நடைமுறையில் காணப்படும் பண்டங்களின் உற்பத்தி அளவை உண்மை வெளியீடு என்பர்.
- இது சாத்தியமான வெளியீட்டை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ காணப்படும்.

**பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் முக்கிய காரணிகள்**

1. **வளங்களின் அளவில் ஏற்படும் அதிகரிப்பு**
   - பௌதீக மூலதனம் அதிகரித்தல்
   - இயற்கை மூலதனம் அதிகதரித்தல்.
   - மனித மூலதனம் அதிகரித்தல்.
   - சமூக மூலதனம் அதிகரித்தல்.
2. **வளங்களின் விளைதிறன் அதிகரித்தல்**
   - தொழில்நுட்ப முன்னேற்றம்
   - புத்தாக்கங்களை விருத்தி செய்தல்.
   - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்
   - முகாமைத்துவ முன்னேற்றம்
3. **உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தியடைதல்.**
4. **பொருளாதார உறுதிநிலை**
5. **அரசியல் மற்றும் சமூக உறுதிப்பாடு**
6. **நல்லாட்சி**
7. **புதிய சந்தைவாய்ப்புக்களை விரிவுபடுத்தல்.**

**பொருளாதார வளர்ச்சியின்போது பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்படுகின்ற மாற்றம்**

- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் / மொத்த தேசிய உற்பத்தியில்
  1. விவசாயத்துறையின் சதவீதம் வீழ்ச்சியடையும்
  2. கைத்தொழில்துறையின் சதவீதம் அதிகரிக்கும்
  3. சேவைத்துறையின் சதவீதம் அதிகரித்து முதன்மையான துறையாக மாற்றமடையும்.
- மேலே கூறப்பட்ட மாற்றங்களுக்குரிய காரணங்கள் வருமாறு
  1. வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி வேறுபடுகின்றமை.
     - விவசாயத்துறைப் பண்டங்களுக்கு வருமான நெகிழ்ச்சி ஒன்றை விட குறைவு $(EI < 1)$
     - கைத்தொழில், சேவைக்கு வருமான நெகிழ்ச்சி ஒன்றை விட பெரிது $(EI > 1)$
  2. ஊழியஉற்பத்தி திறனில் அதிகரிப்பு ஏற்படுவதனால் ஊழிய ஒதுக்கீடு மாற்றமடைகின்றமை.

கடந்த பத்தாண்டு காலத்தில் இலங்கையின் பொருளாதார கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

| பொருளாதாரத்துறை | GDP யில் சதவீதம் | |
|---|---|---|
| | 2004 | 2014 |
| விவசாயத்துறை | 18 | 10 |
| கைத்தொழில்துறை | 26 | 32 |
| சேவைத்துறை | 56 | 58 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 100% | 100% |


- 2004-2014க்கு இடையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் சதவீதம் 18% இலிருந்து 10% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.
- கைத்தொழில்துறையின் சதவீதம் 26% இலிருந்து 32% ஆக உயர்வடைந்துள்ளது.
- சேவைத்துறையின் சதவீதம் 56% இலிருந்து 58% ஆகஉயர்வடைவதோடு முதன்மையான துறையாகவும் மாற்றமடைந்துள்ளது.

## பொருளாதாரவளர்ச்சியின் அமையச் செலவு

பொருளாதாரம் ஒன்று வளர்ச்சியடைவதற்கு பௌதீகசூழல், மனித முதல், தொழில்நுட்பம் என்பன அவசியமாகின்றது. இவற்றை ஏற்படுத்த பெருமளவு முதலீடுகள் அவசியம். இத்தகைய முதலீடு சேமிப்பின் மூலமே பெறப்படுகின்றது.

சேமிப்பு = வருமானம் - நிகழ்கால நுகர்வு

சேமிப்பினை அதிகரிப்பதற்கு நிகழ்கால நுகர்வினைக் குறைத்தல் வேண்டும். எனவே பொருளாதாரவளர்ச்சியின் அமையச் செலவு இழக்கப்பட்ட நுகர்வு (பிற்போடப்பட்ட நுகர்வு) ஆகும்.



## பொருளாதாரவளர்ச்சியின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்

### அனுகூலங்கள்

1. நாட்டின் உற்பத்தியளவு அதிகரித்து நுகர்வினை அதிகரித்து மனித தேவைகளை பூர்த்தி செய்யும்.
2. நாட்டின் வருமானம் அதிகரிக்கும்.
3. தொழில் வாய்ப்பு அதிகரிக்கும்.
4. இயந்திர பயன்பாடு, உற்பத்தித்திறன் அதிகரிப்பு போன்றவற்றால் வளர்ச்சியடையப்படின் ஓய்வு அதிகரிக்கலாம்.
5. மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்
6. வறுமையைக் குறைக்கும்
7. வியாபார முயற்சிகளில் உயாந்த லாபம் கிடைக்கும்.
8. அரசநிதி வலுப்பெறும்.

### பிரதிகூலங்கள் அல்லது செலவுகள்

1. சூழல் மாசடைதல்
2. மீள் உருவாக்கமுடியாத வளங்கள் குறைந்து செல்லும். உதாரணம். பெற்றோலியம்
3. எதிர்கால சந்ததியினருக்கான வளங்கள் அருகுதல்
4. வளங்களின் அமையச்செலவு (மேலதிக முதலீட்டுக்காக நிகழ்கால நுகர்வு இழக்கப்படல்)
5. ஊழியப்படை மீதான அழுத்தம் அதிகரிக்கும்.
6. நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி பாதிப்படையும்.
7. வருமானம் மற்றும் சொத்து பரம்பலில் வேறுபாடு ஏற்படும்.
8. பிரதேச ரீதியான வேறுபாடுகள் ஏற்படும்.

## இலங்கையின் பொருளாதாரவளர்ச்சி வீதங்கள்

| ஆண்டு | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொ.வ.வீதம் (மெய் GDP யில்) | 5.4 | 6.2 | 7.7 | 6.8 | 6.0 | 3.5 | 8.0 | 8.4 | 9.1 | 3.4 | 4.9 |

- ❖ அதிகூடிய பொருளாதார வளர்ச்சி வீதம் 9.1 (2012இல்)
- ❖ அதிகுறைந்த பொருளாதார வளர்ச்சி வீதம் -1.5 (2001இல்)
- ❖ கடந்த 10 ஆண்டின் சராசரி வளர்ச்சி வீதம் 6.4 (6-7)

| விடயம் (மொ.உ.உற்பத்தியில்) | 2014 | 2015 |
|---|---|---|
| நுகர்வு வீதம் | 76.0 | 77.4 |
| முதலீடு வீதம் | 32.0 | 30.1 |
| உள்நாட்டு சேமிப்பு வீதம் | 24.0 | 22.6 |
| தேசிய சேமிப்பு வீதம் | 29.5 | 27.8 |

**அட்டவணை 2.1**

## நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)(ஆ)

| பொருளாதார நடவடிக்கை | மாற்ற வீதம் (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | | மொ.உ.உ. இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 (இ) | 2015 | 2014 (இ) | 2015 | 2014 (இ) | 2015 |
| வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல் | 4.9 | 5.5 | 7.8 | 9.0 | 7.8 | 7.9 |
| தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக) | 4.3 | 3.0 | 0.2 | 0.0 | 0.2 | 0.2 |
| அரிசியின் வளர்ச்சி | -7.0 | 23.3 | -1.2 | 3.6 | 0.7 | 0.9 |
| காய்கறிகளின் வளர்ச்சி | 2.1 | 24.9 | 0.3 | 3.5 | 0.7 | 0.8 |
| கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய நீண்ட காலமல்லாத பயிர்கள் | -6.3 | -14.5 | 0.0 | -0.1 | 0.0 | 0.0 |
| பழவகைகளின் வளர்ச்சி | 9.4 | 16.5 | 0.9 | 1.7 | 0.5 | 0.6 |
| எண்ணெய்ப்பசை கொண்ட பழ வகைகளின் வளர்ச்சி (தேங்காய், செவ்விளநீர், கமுகு) | 20.1 | 5.1 | 2.8 | 0.8 | 0.8 | 0.8 |
| தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்) | -1.1 | -2.6 | -0.2 | -0.5 | 0.9 | 0.8 |
| ஏனைய குடிபான பயிர்களின் வளர்ச்சி (கோப்பி, கொக்கோ போன்றவை) | 16.4 | -18.1 | 0.1 | -0.1 | 0.0 | 0.0 |
| வாசனைத்திரவியங்கள், நறுமணப் பயிர்கள், மருந்து மற்றும் மருந்தாக்க பயிர்களின் வளர்ச்சி | 13.1 | -1.3 | 1.7 | 0.2 | 0.7 | 0.7 |
| இறப்பரின் வளர்ச்சி | -24.5 | -10.1 | -2.4 | -0.7 | 0.3 | 0.3 |
| ஏனைய நீண்டகாலப் பயிர்களின் வளர்ச்சி | 7.3 | 2.8 | 0.3 | 0.1 | 0.2 | 0.2 |
| விலங்கு உற்பத்தி | 31.0 | 8.0 | 3.0 | 1.0 | 0.6 | 0.6 |
| தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள் | 6.4 | 0.1 | 0.2 | 0.0 | 0.1 | 0.1 |
| காடாக்கலும் குத்திகளும் | 10.2 | 1.9 | 1.2 | 0.2 | 0.6 | 0.6 |
| மீன்பிடித்தல் | 3.7 | -2.7 | 1.1 | -0.8 | 1.5 | 1.4 |
| கைத்தொழில் | 3.5 | 3.0 | 19.6 | 16.5 | 26.7 | 26.2 |
| சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் | 2.2 | -0.9 | 1.2 | -0.5 | 2.5 | 2.3 |
| தயாரிப்பு | 2.3 | 4.7 | 7.6 | 15.5 | 15.7 | 15.7 |
| மின்சாரம், வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 3.3 | 7.8 | 0.7 | 1.6 | 1.0 | 1.0 |
| நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | 4.8 | 4.3 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| கழிவு நீர், கழிவுப்பொருள், சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் | 11.9 | 24.8 | 0.5 | 1.1 | 0.2 | 0.3 |
| நிர்மாணம் | 6.6 | -0.9 | 9.6 | -1.3 | 7.2 | 6.8 |
| பணிகள் | 5.2 | 5.3 | 59.9 | 62.6 | 56.3 | 56.6 |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியம் மற்றும் தங்குமிடம் மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள் | 4.0 | 4.6 | 19.3 | 22.5 | 23.3 | 23.2 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 11.6 | 12.5 | 1.2 | 1.4 | 0.5 | 0.6 |
| நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துரிமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள் | 8.1 | 12.3 | 18.6 | 29.6 | 11.5 | 12.3 |
| தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய ஆளணி பணி நடவடிக்கைகள் | 4.3 | 1.3 | 11.0 | 3.3 | 12.2 | 11.8 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 5.5 | 3.3 | 9.8 | 5.8 | 8.8 | 8.7 |
| அடிப்படை விலையில் கூட்டப்பட்ட மொத்த பெறுமதிகளுக்கு சமமானவை | 4.7 | 4.6 | 87.3 | 88.1 | 90.8 | 90.7 |
| உற்பத்திகள் மீதான மானியங்கள் கழித்த வரி | 6.9 | 6.2 | 12.7 | 11.9 | 9.2 | 9.3 |
| சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமானவை | 4.9 | 4.8 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | -2.9 | -3.7 | | | | |
| சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம் | 4.9 | 4.8 | | | | |

வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஒரு வழி. அடுத்தவர்களின் வெற்றியை உங்களுடைய வெற்றியைப் போலக் கொண்டாட கற்றுக் கொள்ளுங்கள்.

| விடயம் | 2014 | 2015 |
|---|---|---|
| தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஐ.அ.டொலர்களில்) | 3853 | 3924 |
| தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி (ஐ.அ.டொலர்களில்) | 3766 | 3836 |
| நடைமுறைச் சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஐ.அ.டொலர்களில்) | 80.0 பில்லியன் | 82.3 பில்லியன் |
| நடைமுறைச் சந்தை விலையில் மொத்தத் தேசிய உற்பத்தி (ஐ.அ.டொலர்களில்) | 78.2 பில்லியன் | 80.4 பில்லியன் |

| விடயம் (மொ.உ.உற்பத்தியில்) | 2014 | 2015 |
|---|---|---|
| நுகர்வு வீதம் | 76.0 | 77.4 |
| முதலீடு வீதம் | 32.0 | 30.1 |
| உள்நாட்டு சேமிப்பு வீதம் | 24.0 | 22.6 |
| தேசிய சேமிப்பு வீதம் | 29.5 | 27.8 |

## 2. பொருளாதார அபிவிருத்தி - வறுமை

### பொருளாதார அபிவிருத்தி

ஒரு நாட்டின் வருமானத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்போடு வருமான சமமின்மை குறைந்து தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்து கல்வி, சுகாதார மருத்துவம், போசணை மட்டம், வீட்டு வசதிகள், பொழுதுபோக்கு வசதிகள், அரசியல் சுதந்திரம், சூழல் பாதுகாப்பு என்பவற்றில் தொடர்ச்சியாக முன்னேற்றம் ஏற்பட்டு மக்களின் வறுமை குறைந்து செல்லுதல் பொருளாதார அபிவிருத்தி எனப்படுகின்றது.

பொருளாதார வளர்ச்சியுடன் சமூக, கலாசார, அரசியல், மற்றும் சுற்றாடல் துறைகளிலும் ஏற்படுகின்ற முன்னேற்றமே பொருளாதார அபிவிருத்தியாகும். இது பொருளாதார வளர்ச்சியிலிருந்து வேறுபட்ட எண்ணக்கருவாகும்.

- பொருளாதார அபிவிருத்திக்காக பொருளாதார வளர்ச்சியுடன் பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

1. பொருளாதார உற்பத்தி துறையின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படல்.
2. உற்பத்தி வளங்களின் உற்பத்தி திறன் அதிகரித்தல்.
3. உற்பத்தி நுட்பமுறை மற்றும் தொழிநுட்பத்தில் முன்னேற்றம் ஏற்படல்
4. பொருளாதாரம் நவீனமயமாதல்
5. வருமான சமமின்மை குறைதல்/நீங்குதல்
6. தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்தல்
7. சமூக விடயங்களில் (கல்வி, சுகாதாரம், போசணை மட்டம்) முன்னேற்றம் ஏற்படல்

**ஒரு நாட்டின் அபிவிருத்தி நிலமைகளை மதிப்பீடு செய்யும்பொழுது நீர் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் சமூக பொருளாதார விடயங்கள்**


1. வருமானம் - வருமான மீள் பங்கீடு
2. தொழில் வாய்ப்பு
3. சுகாதார மருத்துவ வசதிகள்
4. கல்வியறிவு
5. போசணை மட்டம்
6. வீட்டு வசதிகள்
7. பொழுதுபோக்கு வசதிகள்
8. அரசியல் தந்திரம்
9. சூழல் பாதுகாப்பு

**நாடுகளின் சமூக பொருளாதார அபிவிருத்தியை வெளிப்படுத்தும் குறிகாட்டிகள்**

1. மானிட அபிவிருத்தி சுட்டெண்
2. பல்பரிமாண வறுமைச் சுட்டெண்
3. பால்நிலை தொடர்பான அபிவிருத்திச் சுட்டெண்
4. உலக புத்தாக்க சுட்டெண்
5. உலக போட்டித்தன்மை சுட்டெண்
6. வியாபாரம் புரிதல் சுட்டெண்
7. சுபீட்ச சுட்டெண்
8. உட்கட்டமைப்புச் சுட்டெண்
9. பொருளாதார சுதந்திர சுட்டெண்
10. உலக சமாதான சுட்டெண்
11. சேவை வழங்கல் செயலாற்றுகை சுட்டெண்.

| | சுகாதாரமும் வாழ்க்கையும் | கல்வியறிவு | வாழ்க்கைத்தரம் |
|---|---|---|---|
| 1. மனித அபிவிருத்திச் சுட்டெண் (HDI) | • பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்க்கை | 1. பாடசாலை செல்லும் சராசரி வருடங்கள்<br>2. பாடசாலை செல்லும் எதிர்பார்க்கப்பட்ட வருடங்கள் | • கொள்வனவு சமமதிப்பின்படியான தலைக்குரிய மொத்த தேசிய வருமானம் |
| 2. பல் பரிமாண வறுமைச் சுட்டெண் (MPI) | 1. போசாக்கு<br>2. சிசுமரண வீதம் | 3. பாடசாலை செல்லும் வருடங்கள்.<br>4. பாடசாலைக்குரிய சிறுவர்களின் வரவு. | 5. சமையல் எரிபொருள்.<br>6. மலசலகூடம்<br>7. குடிநீர்<br>8. மின்சாரம்<br>9. தரை (Floor)<br>10. சொத்துக்கள். |

### லோறன்ஸ் வளையி




$$\text{கினிக்குணகம்} = \frac{A}{A+B}$$

லோறன்ஸ் வளையி சமவருமானப் பரம்பல்க் கோட்டினை நோக்கி செல்லுமாயின் வருமான சமமின்மை குறையும். மாறாக லோறன்ஸ் வளையி சமவருமானப் பரம்பல் கோட்டிலிருந்து விலகிச்செல்லும்போது வருமானச் சமமின்மை அதிகரிக்கும்.

### தென்னாசிய நாடுகளின் மானிட அபிவிருத்திச் சுட்டியின் பெறுமானம் (2013)

| நிலை | நாடுகள் | HDI யின் பெறுமானம் |
|---|---|---|
| 73 | இலங்கை | 0.757 |
| 104 | மாலைதீவு | 0.706 |
| 130 | இந்தியா | 0.609 |
| 132 | பூட்டான் | 0.605 |
| 142 | வங்காளதேசம் | 0.570 |
| 145 | நேபாளம் | 0.548 |
| 147 | பாகிஸ்தான் | 0.538 |
| 171 | ஆப்கானிஸ்தான் | 0.465 |

### HDI யின் படி முதல் ஐந்து நிலையிலுள்ள நாடுகள்.

| நிலை | நாடுகள் | HDI யின் பெறுமானம் |
|---|---|---|
| 1. | நோர்வே | 0.944 |
| 2. | அவுஸ்ரேலியா | 0.935 |
| 3. | சுவிஸ்லாந்து | 0.930 |
| 4. | டென்மார்க் | 0.923 |
| 5. | நெதர்லாந்து | 0.922 |

கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே, அது உன்னை கொன்றுவிடும்.

கண்ணை திறந்து பார், நீ அதை வென்று விடலாம்.

* உலக நாடுகளில் (188) மானிட அபிவிருத்தி மிகவும் குறைந்த நாடாக நைகர் (Nigar) (0.348) விளங்குகின்றது.

* மானிட அபிவிருத்திச் சுட்டியின் அடிப்படையில் நாடுகளை வகைப்படுத்தல்.

1. மிகவும் உயர் மனித அபிவிருத்தி கொண்ட நாடுகள் (0.800 - 1.000)
2. உயர் மனித அபிவிருத்தி கொண்ட நாடுகள் (0.700 - 0.799)
3. மத்திமமான மனித அபிவிருத்தி கொண்ட நாடுகள் (0.550 - 0.699)
4. கீழ்மட்ட மனித அபிவிருத்தி கொண்ட நாடுகள் (0.549 க்குக் கீழ்)

மானிட வறுமைச் சுட்டெண் H.P.I

இச்சுட்டிக்குள் கருத்தில் கொள்ளப்படும் விடயங்கள்

- சுகாதாரமும் வாழ்க்கையும்.
  - ஆயுள் எதிர்பார்க்கை (40 வயதுக்கு முன் இறப்போர் வீதம் கவனத்தில் எடுக்கப்படும்).
- கல்வியறிவு
  - 3ம் நிலைக் கல்வியை பெறாதோர் வீதம் கவனத்தில் எடுக்கப்படும்.
- வாழ்க்கைத் தரம்
  - சுத்தமான குடிநீரை பெறமுடியாத மக்கள் வீதம்
  - சுகாதார வசதியைப் பெறமுடியாத மக்கள் வீதம்
  - ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளிடையே நிலவும் மந்த போசணை.

* இலங்கையின் தலைக்குரிய வறுமைச்சுட்டெண் (P.H.C.I)

| | 1995/96 | 2002 | 2006/07 | 2009/10 | 2012/13 |
|---|---|---|---|---|---|
| நகரம் | 14.0 | 7.9 | 6.7 | 5.3 | 2.1 |
| கிராமம் | 30.9 | 24.7 | 15.7 | 9.4 | 7.6 |
| பெருந்தோட்டம் | 38.4 | 30.0 | 32.0 | 11.4 | 10.9 |
| மொத்தம் | 28.8 | 22.7 | 15.2 | 8.9 | 6.7 |

* மேலுள்ள தகவல்களின் அடிப்படையில் இலங்கையின் வறுமை வீழ்ச்சியடைந்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது.

| | |
|---|---|
| * வறுமை குறைந்த மாகாணம்<br>மேல் மாகாணம் (2.0) | வறுமை கூடிய மாகாணம்<br>ஊவா மாகாணம் (15.4) |
| * வறுமை குறைந்த மாவட்டம்<br>கொழும்பு (1.4) | வறுமை கூடிய மாவட்டம்<br>முல்லைத்தீவு (28.8) |

**வருமான வறுமை**

- அடிப்படை உணவு தேவையினை பூர்த்தி செய்ய போதியளவான வருமானம் கிடைக்காத நிலையினை வருமான வறுமை என்கின்றோம். பொதுவாக குறைந்தபட்ச கலோரி தேவையை பூர்த்தி செய்வதற்கு போதுமான வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியத நிலையை இது குறிக்கும். இவ்வறுமை முழு வறுமையை குறித்து நிற்கும்.
- வருமான வறுமை வறுமைக்கோட்டின் அடிப்படையில் விளக்கப்படும். இதன்படி தனிநபரின் ஒரு நபருக்குரிய வருமானம் 1.08$ க்கு குறைவாக இருப்பின் அது கீழ்மட்ட வறுமைக்கோடாகும். அதேபோல 2.15$ க்கு குறைவாக வருமானம் இருத்தல் மேல்மட்ட வறுமைக்கோடாக இருக்கும்.

**நுகர்வு வறுமை அல்லது மானிட வறுமை**

- சுதந்திரம், தன்மானம், மற்றவர்களின் கவனிப்பு என்பவற்றை அனுபவித்துக் கொண்டு தேகாரோக்கியத்துடன் மற்றும் மகிழ்ச்சிகரமான வாழக்கைத் தரத்தை பேணுவதில் வெற்றி கண்ட மானிட அபிவிருத்திக்கான வாயப்புக்களையும், தெரிவுகளையும் இழந்த நிலைமையை மானிடவறுமை என ஐக்கியநாடுகள்ஸ்தாபனம் வரைவிலக்கணப்படுத்தியுள்ளது.
- அடிப்படை மனித இயலுமைகள் போதியளவு இல்லாதிருத்தல், எழுத்தறிவின்மை, போசாக்கின்மை குறைந்த ஆயுள் காலம் குறைந்த உள நலம், தடுக்கக்கூடிய நோய்களின் தாக்கம் என்பவற்றின் அடிப்படையில் மானிட வறுமை விளக்கப்படுகின்றது. இவ்வறுமையை அளவிடுவதற்கு மனித வறுமைச் சுட்டெண் பயன்படுத்தப்படுகின்றது.

❖ இலங்கையின் வறுமைக்கோடு ரூபா.4123 (2016 ஜுன்)

**இலங்கையின் வறுமையை குறைப்பதற்கு அரசாங்கம் அண்மைய ஆண்டுகளில் மேற்கொண்ட செயற்பாடுகள்.**

- சமுர்த்தி கொடுப்பனவுகளை 50 வீதத்தினால் அதிகரித்தமை.
- கிராமிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக "மகநெகும, கமநெகும, சுமிபுபுதுவ மற்றும் கிராமிய மின்வலுத்திட்டங்கள்" நடைமுறைப்படுத்தல்.
- முயற்சியாண்மை அபிவிருத்தி திட்டங்களை ஏற்படுத்துவதற்காக ஜெனபுபுதுவ, கமதிரிய, ஏக கம்மான திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- பிரதேச அபிவிருத்தி திட்டங்கள் என்ற வகையில் ரஜரட்ட நவோதய புபுதமு வெல்லஸ்ச, செங்கடகல உதானய, வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் போன்ற திட்டங்களை செயற்படுத்தல்.
- விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக உர மானிய திட்டத்தையும், நெல்லுக்கான உத்தரவாத விலையையும் நடைமுறைப்படுத்தியமை.
- செறிவான சிறிய, மற்றும் நடுத்தர கைத்தொழில்களை முன்னேற்றுவதற்காக நாடு முழுவதிலும் 300 கைத்தொழிற்சாலைகளை நிறுவுதல், லங்காபுத்திர நிகழ்ச்சித்திட்டம், நெணச நிகழ்ச்சித்திட்டம், தேசிய முயற்சியாளர் வங்கி மற்றும் செயற்படுத்துதல்.
- உயர்கல்வி மற்றும் வசதிகள் தொடர்பான ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்காக கிராமத்திற்கு தொழினுட்பத்தை கொண்டு வருகின்ற விஞ்ஞான தொழிநுட்ப வள நிலையங்களை உருவாக்குதல். மற்றும் ஊவா வெல்லஸ்ச பல்கலைக்கழகம், சமுத்திர பல்கலைக்கழகம் போன்றவற்றை ஸ்தாபித்தமை.
- சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள்
- மக்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் (கிராமிய சிறு குளங்களை புனரமைத்தல், வரண்ட வலய குளங்களை புனரமைத்தல், கிராமிய பாதை புனரமைப்பு)
- நெணநுவன (கல்வி) புலமைப் பரிசில்களை வழங்கும் திட்டம்.
  - வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள பெண்களுக்கு உதவும் திட்டம் (காந்தா பிலிசெரண)
  - திவிநெகும திட்டம்
  - கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசணை திட்டம்.

## நல்லாட்சி(Good governance)

- நாட்டின் அதிகாரிகள் ஆட்சியை நடாத்திச் செல்லும் பொருட்டு பயன்படுத்தும் நிறுவனங்களும், நிர்வாக நடவடிக்கைகளும், நியாயமானவையாகவும் நல்லவையாக இருத்தல் நல்லாட்சி எனப்படும்.
- ஊழல் மிகக் குறைந்த மட்டத்தில் இருப்பதனையும் சிறுபான்மை இனங்களின் கருத்துக்கள் உள்வாங்கப்படுவதனையும் சமூகத்தில் மிகவும் பாதிக்கப்படும். நிலையிலுள்ளவர்களின் குரல்கள் தீர்மானம் மேற்கொள்ளும்போது கருத்தில் கொள்ளப்படுவதனையும் நல்லாட்சி உள்ளடக்கியுள்ளது.

### நல்லாட்சியின் பண்புகள்

- பங்குபற்றும் தன்மை
- வெளிப்படைத் தன்மை
- பொறுப்புகூறும் தன்மை
- இணக்கப்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை
- துலங்கல் உடமைத்தன்மை
- வினைத்திறன் கொண்டிருக்கும் தன்மை.
- அனைத்தையும் உள்ளடக்கும் தன்மை
- சட்டதிட்டங்களைப் பின்பற்றும் தன்மை.
- சமத்துவத்தன்மை

### நல்லாட்சியின் முக்கியத்துவங்கள்

- பொருளாதார அபிவிருத்திக்கு முன் நிபந்தனையாயிருத்தல்.
- பொதுநிதியில் முகாமைத்துவத்தின் செயற்திறனைத் தீர்மானிக்கும்.
- பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டினை ஏற்படுத்த உதவும்.
- அரச பாதீட்டுப் பற்றாக்குறையை குறைக்க உதவும். (இறை உறுதிப்பாடு)
- முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி தேவைகளுக்காகவும் சமூக நலன்புரி செலவீனங்களையும் வளங்களையும் பெற்றுக் கொள்வதற்கு உதவுதல்.

### நல்லாட்சிச் சுட்டெண்ணுக்குள் உள்ளடங்கியுள்ள விடயங்கள்

1. குரல் எழுப்பும் உரிமையும் பொறுப்புக்கூறலும்.
2. அரசியல் உறுதிப்பாடும் வன்முறையற்ற சூழலும்.
3. அரசின் வினைத்திறன்.
4. நிர்வாக நடவடிக்கைகளின் தரம். (சரியான கொள்கைகளை அமைத்தல், தனியார் துறை வளர்ச்சிக்கு இடையூறு ஏற்படாமை)
5. நீதித்துறை சுதந்திரம்.
6. ஊழலை ஒழித்தல்.

### பொருளாதார சுதந்திரம்

- ஒரு நாட்டிலுள்ள மக்கள் அரச தலையீடு இல்லாமல் தாமாகவே சுதந்திரமான முறையில் உற்பத்தி செய்தல், பங்கீடு செய்தல், பொருட்களையும் சேவைகளையும் நுகர்ந்து அவர்களுடைய அத்தியாவசியமான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான சுதந்திரத்தை பொருளாதார சுதந்திரம் என்பர்.

**அறிவுதான் உங்களை சிறந்தவர்களாகவும், பலமுள்ளவர்களாகவும் மாற்றுகிறது.**

| பொருளாதார சுதந்திரச் சுட்டெண் | |
|---|---|
| **விடயங்கள்** | **உள்ளடங்குபவை** |
| சட்டத்தின் ஒழுங்கு | 1. சொத்து தொடர்பான சுதந்திரம்<br>2. ஊழலிலிருந்து விடுபடல் |
| அரசின் பருமன் | 3. இறைசுதந்திரம்<br>4. அரச செலவீனம் |
| ஒழுங்குபடுத்தல் வினைத்திறன் | 5. வியாபார சுதந்திரம்<br>6. ஊழியர் சுதந்திரம்<br>7. நாணய சுதந்திரம் |
| திறந்த சந்தை | 8. வர்த்தக சுதந்திரம்<br>9. முதலீட்டுச் சுதந்திரம்<br>10.நிதியியல் சுதந்திரம் |

## உலகப் போட்டிச்சுட்டெண்

பின்வரும் 3 விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

**1. அடிப்படைத் தேவைகளின் தரம்**

1. ஸ்தாபன நிர்வாகக் கட்டமைப்பு
2. உட்கட்டமைப்பின் தரம்
3. பேரினப் பொருளாதார உறுதி
4. சுகாதாரம், ஆரம்பக்கல்வியின் தரம்
5. உயர்கல்வி, பயிற்சிகளின் தரம்.

**2. வினைத்திறனை உயர்த்தும் காரணிகள்**

1. காரணிச் சந்தையின் வினைத்திறன்.
2. ஊழியச் சந்தையின் வினைத்திறன்.
3. பணச் சந்தையின் வளர்ச்சி.
4. தொழில்நுட்ப விருத்தி
5. நாட்டின் சந்தையின் பருமன்.

**3. புத்தாக்கத்தின் அளவு**

1. வியாபார முயற்சிகளின் தரம்
2. புத்தாக்கத்திற்கு நாடு காட்டும் ஆர்வம்

## புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள் (MDG)
## (Millennium Development Goals)

1. தீவிர வறுமை மற்றும் பட்டினியை ஒழித்தல்.
2. உலகளாவிய முதன்மை கல்வியை எட்டுதல்.
3. பால்நிலைச் சமத்துவத்தை மேம்படுத்தல் மற்றும் பெண்களை வலுவூட்டல்.
4. சிறுவர் இறப்பு வீதத்தைக் குறைத்தல்.
5. மகப்பேற்று சுகாதாரத்தை மேம்படுத்தல்.
6. HIV/AIDS, மலேரியா மற்றும் வேறு நோய்களை எதிர்கொள்ளல்.
7. சுற்றுப்புறச்சூழல் நிலைத்திருக்கும் தன்மையை உறுதிப்படுத்தல்.
8. அபிவிருத்திக்கான உலகளாவிய பங்காளித்துவத்தை விருத்தி செய்தல்.




## நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்குகள் - SDGs

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் [UNO] புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள் [MDGs] 2015ம் ஆண்டுடன் முடிவுறுத்தப்படுவதால் அதற்குப் பதிலீடாக நிலைத்துநிற்கும் அபிவிருத்தி இலக்குகள் 2016 முதல் 2030ஆம் ஆண்டு வரையிலான 15 ஆண்டு காலப்பகுதிக்கு உரியதாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 17 குறிக்கோள்களையும் 169 இலக்குகளையும் அடையத் திட்டமிட்டுள்ளது.

17 குறிக்கோள்களையும் ஐந்து விரிவான விடயங்களாக கவனம் செலுத்தப்படுகின்றது.

1. மக்கள்
2. பூகோளம்
3. சுபீட்சம்
4. சமாதானம்
5. பங்குடமை


### 17 குறிக்கோள்களும் வருமாறு



**01. வறுமை இன்மை (No Poverty)**
எல்லா இடங்களிலும் எல்லா வகையிலான வறுமையை இல்லாதொழித்தல்.



**02. பசியின்மை (Zero Hunger)**
பட்டினியை ஒழித்தல், விரட்டுதல், உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துதல், போசணை மட்டத்தினை மேம்படுத்துதல் மற்றும் நிலைத்து நிற்கும் விவசாயத்தினை ஊக்குவித்தல்.



**03. நல்ல ஆரோக்கியம் (Good Health and Well – Being)**

எல்லோருக்கும் எல்லா வயதிலும் நலம் குன்றாத உயிர்வாழ்வை உறுதி செய்தலும் எல்லா வயதினருக்கும் நல்வாழ்வை முன்னெடுத்தல்.




**04. தரமான கல்வி (Quality Education)**

எல்லோரையும் உள்ளடக்கிய சமவாய்ப்புள்ள, சமத்துவமான தரமான கல்வியை உறுதிப்படுத்துதல். அத்துடன் எல்லோருக்கும் வாழ்நாள் முழுவதுமான கல்விகற்றலுக்கான வாய்ப்பை ஏற்படுத்துதல்.




**05. பாலினச் சமத்துவம் (Gender Equality)**

பாலினச் சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்துப் பெண்கள், சிறுமிகளுக்கு அதிகாரம் அளித்தல்.



**06. சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் (Clean water and Sanitation)**

எல்லோருக்கும் சுத்தமான நீரினை கிடைக்கச் செய்வதுடன் நிலைத்து நிற்கக்கூடிய சுகாதாரத்தினை மேம்படுத்துதல்.



**07. புதுப்பிக்கக் கூடிய மற்றும் மலிவான சக்தி.(Affordable & Clean Energy)**

எல்லோருக்கும் மலிவான, நம்பகமான, நிலைத்திருக்கக் கூடிய □மற்றும் நவீன முறையான எரிசக்தி கிடைப்பதனை உறுதிப்படுத்துதல்.



**08. நல்ல முறையான வேலையும் பொருளாதார வளர்ச்சியும். (Decent work and Economic Growth)**

எல்லோருக்கும் நிலையான அனைத்தையும் உள்ளடக்கிய □நிலைத்திருக்கக் கூடிய பொருளாதார வளர்ச்சியையும் □வினைத்திறனான தொழில் வாய்ப்பையும் உருவாக்குதல்.




**09. தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள். (Industry, Innovation and Infrastructure)**

தாங்கும் திறன் கொண்ட உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல். உள்ளடங்கலான நிலைத்து நிற்கும் தொழில்மயமாக்கல் மற்றும் புத்தாகத்தினை வளர்த்தல்.




**10. சமமின்மையை குறைத்தல் (Reduced Inequalities)**

நாடுகளுக்குள்ளேயும், நாடுகளுக்கிடையேயும் காணப்படுகின்ற சமமின்மையைக் குறைத்தல்.



11. **நிலைத்து நிற்கும் நகரங்களும் சமூகங்களும் (Sustainable Cities and Communities)**
நகரங்களையும் மனித சமூகங்களையும், குடியிருப்புக்களையும் உள்ளடக்கியதாக பாதுகாப்பானதாகவும், நிலைத்திருக்கக் கூடியதுவாகவும் அவற்றை உருவாக்குதல்.



12. **பொறுப்பான நுகர்வும் உற்பத்தியும் (Responsible Consumption and Production)**
நிலைத்திருக்கக் கூடிய நுகர்வு, உற்பத்தி, உற்பத்தி வடிவங்களை உறுதிசெய்தல்



13. **காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துதல் (Climate Action)**
காலநிலை மாறுபாட்டையும் அதன் பாதிப்புக்களையும் எதிர்கொள்ளக் கூடிய வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்



14. **நீர் நிலைகளின் பாதுகாப்பு (Life Below Water)**
சமுத்திரம், கடல்கள் மற்றும் நீர் நிலை வளங்கள் போன்றவற்றை நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்திக்கு பயன்படுத்தக் கூடிய வகையில் பாதுகாத்தல்.



15. **புவிச் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் (Life on Land)**
நிலச்சூழலியல் அமைப்புக்களைப் பாதுகாப்பதுடன் அவற்றின் நீடித்த பயன்பாட்டை ஊக்குவித்தல் காடுகளை முறையாகப் பாதுகாப்பதுடன் பாலைவனமாகுதலுக்கு எதிராக செயற்படுதலும் மற்றும் நிலம் மாசடைதலைத் தடுப்பதுடன் பல்லுயிரிழப்புக்களையும் தடுத்தல்.



16. **அமைதி, சமாதான மற்றும் உறுதியான நிறுவனங்கள் (Peace, Justice and Strong Institution)**
நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்திக்காக யாவரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்குதல். எல்லோருக்கும் நீதியைக் கிடைக்கச் செய்தல். அத்துடன் எல்லா விடயங்களிலும் செயல்திறன் மிக்க பொறுப்புக் கூறக்கூடிய நிறுவனங்களை உருவாக்குதல்.



17. **உலகளாவிய பங்குடைமையை ஏற்படுத்தல் (Partnership for the Goals)**
நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு உலகளாவிய ரீதியிலான பங்களிப்புக்களை கிடைக்கச் செய்தல்.

**தலாமொத்த தேசிய வருமானத்தின் அடிப்படையில் நாடுகளை வகைப்படுத்தல் (உலக வங்கியின் வகைப்படுத்தல் முறை)**

1. குறைந்த வருமானம் பெறும் நாடுகள் (1045$ க்கு கீழ்)
2. நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் (1046$ - 12735$)
   - i) கீழ் நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் (1046$ - 4125$)
   - ii) மேல் நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் (4126$ - 12735$)
3. உயர் வருமானம் பெறும் நாடுகள் (12735$ க்கு மேல்)

**இலங்கையின் 5 + 1 திட்டத்தின் மையங்கள்**

1. கடல் போக்குவரத்து மையம்
2. விமான போக்குவரத்து மையம்
3. வர்த்தக மையம்
4. சக்திவள மையம்
5. அறிவு மையம்
6. சுற்றுலா மையம்

## 3. இலங்கையின் சனத்தொகை

**i) ஒரு நாட்டின் சனத்தொகை வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் விடயங்கள்**

1. பருமட்டான பிறப்பு வீதம்
2. பருமட்டான இறப்பு வீதம்
3. தேறிய குடிப்பெயர்ச்சி

$$\text{பருமட்டான பிறப்பு வீதம்} = \frac{\text{உயிர் பிறப்புக்களின் எண்ணிக்கை} \times 1000}{\text{நட்டாண்டுச் சனத்தொகை}}$$

$$\text{பருமட்டான இறப்பு வீதம்} = \frac{\text{இறப்புக்களின் எண்ணிக்கை} \times 1000}{\text{நட்டாண்டுச் சனத்தொகை}}$$

இயற்கை வளர்ச்சி = பருமட்டான பிறப்பு வீதம் - பருமட்டான இறப்பு வீதம்

$$\text{இயற்கைவளர்ச்சிவீதம்} = \frac{\text{பருமட்டான பிறப்பு வீதம்-பருமட்டான இறப்பு வீதம்} \times 100}{1000}$$

$$\text{தேறிய குடிப்பெயர்ச்சி வீதம்} = \frac{\text{குடிவரவு - குடியகல்வு x 100}}{1000}$$

சனத்தொகை வளர்ச்சிவீதம் = இயற்கை வளர்ச்சிவீதம்+தேறிய குடிப்பெயர்ச்சி வீதம்

| ஆண்டு | சனத்தொகை அளவு (மில்லியன்) | பருமட்டான பிறப்பு வீதம் (1000ற்கு) | பருமட்டான இறப்பு வீதம் (1000ற்கு) | சனத்தொகை வளர்ச்சி % (100ற்கு) |
|---|---|---|---|---|
| 1971 | 12.7 | 30.4 | 7.7 | 1.4% |
| 1981 | 14.8 | 28.2 | 5.9 | 1.7% |
| 1991 | 17.3 | 21.7 | 5.8 | 1.5% |
| 2001 | 18.8 | 19.1 | 6.0 | 1.4% |
| 2009 | 20.4 | 18.4 | 5.9 | 1.1% |
| 2012 | 20.3 | 17.5 | 6.0 | 0.9% |
| 2013 | 20.5 | 17.9 | 6.2 | 0.8% |
| 2014 | 20.7 | 16.9 | 6.2 | 0.9% |
| 2015 | 20.9 | 16.0 | 6.3 | 0.9% |

* இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற விடயங்கள்.

1. பருமட்டான பிறப்பு வீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டு வருதல். (பருமட்டான இறப்பு வீதம் தாழ்ந்த மட்டத்தில் இருத்தல்)
2. தேறிய குடிப்பெயர்ச்சி வீதம் எதிர்க்கணியமாகியிருத்தல்.


- குடியடர்த்தி (2014) = 331 பேர்
- சிசுமரண வீதம் (2013) = $\frac{8}{1000}$
- தங்கியிருப்போர் வீதம் (2014) = 49.5
- ஆயுட்காலம் = 75 வருடங்கள்
- கல்வியறிவு வீதம் = 93%

**ii)** சனத்தொகையின் வயதமைப்பு

| ஆண்டு | வயதுப் பிரிவு | | |
|---|---|---|---|
| | **0 - 14** | **15 - 59** | **$60^+$** |
| 1971 | 39.0 | 54.7 | 6.3 |
| 1981 | 35.3 | 58.1 | 6.6 |
| 1991 | 31.4 | 60.4 | 8.2 |
| 2001 | 24.8 | 65.2 | 10.0 |
| 2012 | 25.7 | 61.1 | 13.3 |
| 2021 | 18.9 | 63.2 | 17.9 |
| 2031 | 15.3 | 62.3 | 22.4 |
| 2041 | 14.3 | 57.9 | 27.8 |

* 1971 - 2012க்கு இடைப்பட்ட நான்கு தசாப்தத்தில் சனத்தொகையின் வயதமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் வருமாறு :

1. சனத்தொகையில் சிறுவர்களின் சதவீதம் 39.0% இலிருந்து 25.7% ஆகக் குறைந்துள்ளது.
2. சனத்தொகையில் வேலை செய்யும் வயதிலான குடிசனத்தின் வீதம் 54.7% இலிருந்து 61.1% ஆக அதிகரித்துள்ளது.
3. சனத்தொகையில் முதியவர்களின் சதவீதம் 6.3% இலிருந்து 13.3% ஆக அதிகரித்துள்ளது.



### முதியவர்கள் தொகை அதிகரிப்பதன் பொருளாதார விளைவுகள்

- முதுமைப்பருவசார்ந்து வாழ்வோர் வீதம் அதிகரிக்கும்.
- அரசின் சுகாதார, மருந்து செலவுகள் அதிகரிக்கும்.
- முதியவர்களின் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும்.
- அரசின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அதிகரிக்கும்.
- அரசின்செலவுகள் அதிகரிப்பதனால் அரசபாதீட்டுப் பற்றாக்குறையை அதிகரிக்கும்.
- ஊழியர் நிரம்பலில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

### முதியோர் குடித்தொகைப் பிரச்சினைக்குரிய தீர்வுகள்.

1. சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னலை விருத்தி செய்தல்.
2. வயது முதிர்ந்தோர் பங்களிக்கக் கூடிய முயற்சியாண்மைக் கொள்கைகளை உருவாக்குதல்.
3. முதியோர் பராமரிப்பில் தனியார், அரச சார்பற்ற நிறுவனங்களை ஈடுபடச்செய்தல்.
4. ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்.
5. முதியவர்கள் தொடர்பான நல்லெண்ணத்தை இளம் வயதினர் மத்தியில் விருத்தி செய்தல்.

### "குடித்தொகை, உபகாரம்"

- மொத்த தங்கிவாழ்வோர் வீதம் மிகவும் குறைவாகக் காணப்படுவதனைக் குறிக்கும்.
- நாடொன்றின் சிறுவர் சார்ந்து வாழ்வோர் 30% க்கு குறைவாகவும், முதியோர் தங்கி வாழ்வோர் 15% க்கும் குறைவாகவும் இருத்தலை குடித்தொகை உபகாரம் எனப்படும்.

$$\text{சார்ந்து வாழ்வோர் வீதம்} = \frac{\text{சிறுவர்களும் முதியவர்களும்} \times 100}{\text{வேலை செய்யும் வயதிலான குடித்தொகை}}$$

* சனத்தொகை கூடிய மாவட்டம் - கொழும்பு 2,326,000 பேர்
சனத்தொகை குறைந்த மாவட்டம் - முல்லைத்தீவு 93,000 பேர்

* குடியடர்த்தி கூடிய மாவட்டம் - கொழும்பு 3,441 பேர்
குடியடர்த்தி குறைந்த மாவட்டம் - முல்லைத்தீவு 39 பேர்

**இலங்கையின் குடித்தொகையின் நிலைமாற்றத்தின் (demographic transition) பிரதான அம்சங்களினை இனங்காண்க. அவற்றின் பிரதான பொருளாதார விளைவுகள்**

- உயர்ந்த பிறப்பு வீதமும், உயர்ந்த இறப்பு வீதமும் விரும்பத்தகாத குறைந்த சனத்தொகை வளர்ச்சிவீதத்தில் இருந்து தாழ்ந்த பிறப்புவீதமும், தாழ்ந்த இறப்புவீதமும் கொண்ட விரும்பத்தக்க குறைந்த சனத்தொகை வளர்ச்சிக்கு மாற்றமடைந்துள்ளது.

- சனத்தொகையில் சிறுவர் வீதம் வீழ்ச்சியடைந்து முதியவர்களின் சதவீதம் உயர்வடைந்து செல்கின்றமை. இதனால் சனத்தொகையின் வயதமைப்பு பிரமிட் வடிவத்திலிருந்து உருளை வடிவத்திற்கு மாற்றமடைந்து வருகின்றமை.

- ஆயுட்கால அதிகரிப்பும், தாழ்ந்த மரணவீதமும் முதியவர்களின் தொகையை அதிகரிக்கச் செய்துள்ளது. தற்காலத்தில் முதியவர்களில் ஆண்களைவிடப் பெண்கள் தொகை அதிகரித்துள்ளது.

**பொருளாதார விளைவுகள்**

- முதியோர் தொகை அதிகரிப்பதன் விளைவுகள்.
- 15 வயதுக்குட்பட்டவர்களின் சதவீதம் வீழ்ச்சியடைவதன் விளைவுகள்.

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

## 4. ஊழியற்படை

**இலங்கையில் வேலை செய்யும் வயதிலான குடித்தொகை**

- 15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்.

**பொருளாதார ரீதியில் செயலற்ற மக்கள் பிரிவினர்.**

1. முழுநேரமானவர்கள்
2. குடும்பத் தலைவிகள்
3. அங்கவீனர்கள்
4. மதகுருமார்கள்
5. ஓய்வு பெற்றவர்கள

ஊழியற்படை = வேலை செய்யும் வயதிலான குடிசனம் - பொருளதாரரீதியில் செயலற்ற குடித்தொகை

OR

ஊழியற்படை = தொழில் புரிவோர் + தொழில் தேடுபவர்கள்

$$\text{ஊழியற்படையின் பங்கேற்பு வீதம்} = \frac{\text{ஊழியற்படை}}{\text{வேலைசெய்யும் வயதிலான குடிசனம்}} \times 100$$

$$\text{தொழில் வீதம்} = \frac{\text{தொழில் புரிபவர்களின் எண்ணிக்கை} \times 100}{\text{ஊழியற்படை}}$$

$$\text{தொழிலின்மை வீதம்} = \frac{\text{தொழிலற்றோர் எண்ணிக்கை} \times 100}{\text{ஊழியற்படை}}$$

| | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| 1. ஊழியற்படையின் பங்கேற்பு வீதம் (மொத்தம்) | 52.6 | 53.8 | 53.3 | 53.8 |
| ஆண் | 75 | 75 | 75 | 75 |
| பெண் | 33 | 36 | 35 | 36 |
| 2. வேலையின்மை வீதம் | 4.0 | 4.4 | 4.3 | 4.6 |

நீங்கள் உறங்கும்போது வருவதல்ல கனவு. உங்களை உறங்கவிடாமல் செய்வதே கனவு.

* தொழிலின்மை வீதம் (தொழிற்படையின் சதவீதமாக தொழிலற்றோர்)

| வகை | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| 1. பால்வகைப்படி | | | |
| - ஆண் | 3.2 | 3.2 | 3.0 |
| - பெண் | 6.6 | 6.5 | 7.6 |
| 2. கல்விமட்ட அடிப்படையில் | | | |
| - வகுப்பு 5 - 9 / ஆண்டு 6 - 9 | 3.4 | 3.4 | 3.5 |
| - க. பொ. த (சா/த) | 5.9 | 5.9 | 6.4 |
| - க. பொ. த (உ/த) மற்றும் அதற்கு மேல் | 8.6 | 8.1 | 9.2 |
| 3. வயதடிப்படையில் | | | |
| - 15 - 19 | 18.7 | 21.5 | 23.8 |
| - 20 - 24 | 19.2 | 20.0 | 19.7 |
| - 25 - 29 | 7.5 | 8.3 | 9.4 |
| - 30 - 39 | 2.7 | 2.7 | 3.1 |
| - 40 வயதுக்கு மேல் | 1.0 | 0.9 | 1.0 |

## இலங்கையின் வேலையின்மையின் பண்புகள்

1. தொழிலின்மை வீதம் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்கின்றது.
2. இலங்கையில் படித்தவர்களின் மத்தியில் வேலையின்மை உயர்வாகவுள்ளது. [க. பொ. த (உ/த) மற்றும் அதற்கு மேற்பட்ட தகைமையுள்ளவர்களின் மத்தியிலேயே வேலையின்மை உயர்வாகவுள்ளது.]
3. ஆண்களைவிடப் பெண்கள் மத்தியில் வேலையின்மை உயர்வாகவுள்ளது.
4. 15 - 24 வயதுப் பிரிவினரிடையே வேலையின்மை உயர்வாகவுள்ளது.
5. வேலையற்றோர் தொகை நகரத்தினைவிடக் கிராமத்தில் அதிகமாக உள்ளமை.

*** தொழில்நிலைத்தன்மை அடிப்படையில் ஊழியத்தை வகைப்படுத்தல்.**

1. அரசதுறை ஊழியர்கள் - 15.1
2. தனியார்துறை ஊழியர்கள் - 40.6
3. தொழில் தருநர்கள் - 3.0
4. சுயவேலை செய்வோர் - 32.2
5. கொடுப்பனவற்ற குடும்பத் தொழிலாளர்கள் - 9.1

| | 2013 | 2014 |
|---|---|---|
| • தொழிற்படை | 8802000 | 8805000 |
| - தொழில் புரிபவர்கள் | 8418000 | 8424000 |
| - தொழிலைத் தேடுபவர்கள் | 384000 | 381000 |

- **வெளிநாட்டு வேலை வாய்ப்பு**

| நாடு | எண்ணிக்கை | | சதவீதம் | |
|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2013 | 2014 |
| 1. சவுதி அரேபியா | 80887 | 80539 | 27.6 | 26.8 |
| 2. கட்டார் | 80724 | 84571 | 27.5 | 28.2 |
| 3. குவைத் | 27027 | 25896 | 9.2 | 8.6 |
| 4. ஐக்கிய அரபு இராச்சியம் | 48502 | 50192 | 16.6 | 16.7 |
| 5. ஏனையவை | 56078 | 59215 | 19.1 | 19.7 |
| மொத்தம் | 293218 | | 100% | |

**கீழ் உழைப்பு**

- ❖ குறைந்த மணித்தியாலம் வேலை செய்தல் (நாள் ஒன்றுக்கு 8 மணித்தியாலத்தை விடக் குறைவு)
- ❖ தகமைக்கும் அனுபவத்திற்கும் குறைந்த தொழில்களில் ஈடுபடல்.
- ❖ குறைந்த உற்பத்தித்திறன் காரணமாக குறைந்த வருமானம் பெறல். (எல்லை உற்பத்தி பூச்சியமாகக் காணப்படல்)

உலக எண்ணெய் விலை வீழ்ச்சிக்குரிய காரணங்கள்.

1. ஒபெக் நாடுகள் பெற்றோலியத்தை மிகையாக நிரம்பல் செய்தமை.
2. மெக்சிக்கோ வளைகுடாவில் கடலுக்கடியில் இருந்து பெற்றோலியம் அகழ்ந்தெடுக்கப்படுகின்றமை.
3. சீனாவின் சுகாதாரம் பற்றி எண்ணெய் தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகள்.
4. வளர்ச்சியடைந்த நாடுகள் எரிபொருள் சிக்கனமான வாகனங்களை உற்பத்தி செய்வதால் பெற்றோலியத்தின் கேள்வி பாதிக்கப்பட்டமை.
5. சர்வதேச ரீதியான பொருளாதாரக் குழப்பங்கள்.

| ஆண்டு | ஒரு பரல் எண்ணெயின் விலை |
|---|---|
| 2014 | 110 ஐ.அமெ.டொலர் |
| 2015 | 60 ஐ.அமெ.டொலர் |
| 2016 | 32 ஐ.அமெ.டொலர் |

# M.C.Q

01. பொருளாதார வளர்ச்சியானது பொதுவாகக் கணிப்பிடப்படுவது.

1. நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் வருடாந்த மாற்றத்தினாலாகும்.
2. மெய் மொத்தத் தேசிய உற்பத்தியின் வருடாந்த மாற்றத்தினாலாகும்.
3. முதலீட்டு வீதத்தில் ஏற்படும் வருடாந்த மாற்றத்தினாலாகும்.
4. நுகர்வோர் செலவீட்டில் ஏற்படும் வருடாந்த மாற்றத்தினாலாகும்.
5. ஆக்கக் கைத்தொழில் வெளியீட்டின் வருடாந்த மாற்றத்தினாலாகும்.

02. பொருளாதார வளர்ச்சி வீதத்தினால் அளவிடப்படுவது.

1. உற்பத்தித் திறன் வளர்ச்சியாகும்
2. தலைக்குரிய வருமான வளர்ச்சியாகும்
3. பெயரளவு தேசிய வருமான அதிகரிப்பாகும்.
4. வெளியீட்டில் ஏற்படும் மாற்றச் சதவீதமாகும்.
5. வளப் பயன்பாட்டு மட்டமாகும்.

03. தரப்பட்ட ஆண்டொன்றில் நாடொன்றில் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 8% ஆகவும், பணவீக்க வீதம் 5.5% ஆகவும் சனத்தொகை வளர்ச்சி வீதம் 2.5% ஆகவும் இருப்பின் தலைக்குரிய மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீத வளர்ச்சி அண்ணளவாக.

1. -2.5% ஆகும்.
2. 0% ஆகும்.
3. 2.5% ஆகும்.
4. 5.0% ஆகும்.
5. 10.5% ஆகும்.

04. மிகத்துரிதமான பொருளாதார வளர்ச்சியினை பெரும்பாலும் ஏற்படுத்தவல்ல ஒரு காரணிச்சேர்க்கையாக அமைவது

1. தொழில் வாய்ப்புக்களில் ஏற்படும் ஓர் அதிகரிப்பும் சென்மதி நிலுவையில் குறை நிலை அதிகரிப்பும்
2. முதலீட்டு மட்டம் மற்றும் தொழில் புரியும் சனத்தொகையின் அளவு என்பவற்றில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
3. வருமானம் சமமாகப் பகிரப்படுவதுடன் மாற்றல் செலுத்தல்கள் உயர் மட்டத்தில் இருத்தல்
4. பணவீக்கம் துரிதமடைதல் மற்றும் தேசிய கடன்கள் அதிகரித்தல்
5. வெளிநாட்டு நேரடி முதலீடும் வட்டி வீதமும் அதிகரித்தல்

05. பின்வரும் அட்டவணையானது தரப்பட்ட ஆண்டொன்றில் A.B, C, D மற்றும் E ஆகிய நாடுகளின் நுகர்வு, மொத்த மூலதனவாக்கம் மற்றும் பெறுமானத்தேய்வு பற்றிய புள்ளி விபரங்களைன காட்டுகிறது. புள்ளிவிபரங்கள் யாவும் மில்லியன் அமெரிக்க டொலரில் கணிக்கப்பட்டுள்ளன).

| நாடு | நுகர்வு | மொத்த மூலதனம் | பெறுமானத்தேய்வு |
|---|---|---|---|
| A | 200 | 40 | 50 |
| B | 500 | 200 | 150 |
| C | 1 000 | 1 200 | 1 400 |
| D | 5 000 | 6 000 | 6 000 |
| E | 10 000 | 8 000 | 8 200 |

இந்நாடுகளின் தொழில்நுட்பம் தரப்பட்டதாகவும் மாறாமலும் உள்ள நிலையில் மேற்படி தகவல்களுக்கமைய பொருளாதார வளர்ச்சியினைப் பெரும்பாலும் அனுபவிக்கக்கூடிய நாடு எது?

1. A 2. B 3. C 4. D 5. E

06. இலங்கையில் அதிகூடிய பொருளாதார வளர்ச்சி வீதமும் அது காணப்பட்ட ஆண்டினையும் சரியாகக் காட்டும் விடை எது?

| | பொருளாதார வளர்ச்சிவீதம் | ஆண்டு |
|---|---|---|
| 1. | 9.1 | 2013 |
| 2. | 8.4 | 2011 |
| 3. | 8.2 | 1978 |
| 4. | 8.9 | 2010 |
| 5. | 9.1 | 2012 |

07. 2014ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த உள்நாட்டு, தேசிய சேமிப்பு. முதலீடு என்பவற்றின் சதவீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில்?

| | மொத்த உள்நாட்டு சேமிப்பு வீதம் | தேசியசேமிப்பு வீதம் | முதலீட்டு வீதம் |
|---|---|---|---|
| i. | 24.6 | 29.8 | 33.2 |

| | | | |
|---|---|---|---|
| ii. | 16.9 | 22.1 | 30.6 |
| iii. | 24.0 | 29.5 | 32.0 |
| iv. | 16.9 | 24.0 | 30.6 |
| v. | 24.0 | 29.8 | 30.1 |

08. ஒரு நாடு அபிவிருத்தியை அனுபவித்துள்ளது என்பதைப் பின்வருவனவற்றில் எம்மாற்றம் சிறப்பாக வெளிப்படுத்துகிறது?

1. சராசரிப் பிரசையொருவரின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் ஒரு முன்னேற்றம்.
2. நாட்டின் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
3. நாட்டின் வர்த்தக நிலுவையில் ஏற்படும் ஒரு முன்னேற்றம்.
4. நாட்டின் நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு
5. வளர்ந்தோர் எழுத்தறிவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு


09. பின்வரும் அட்டவணையானது 2004 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் பொருளாதாரமொன்றின் மொத்த வருமானம் பல்வேறு வருமானக்குழுக்கள் மத்தியில் பங்கிடப்பட்ட வீதத்தைக் காட்டுகிறது.

| வருமான வகுப்பு | மொத்த வருமானப் பங்கின் சதவீதம் | |
|---|---|---|
| | 2004 | 2013 |
| அதி குறைந்த 10% | 4.1 | 1.5 |
| அதி குறைந்த 20% | 9.8 | 6.8 |
| அதி குறைந்த 30% | 16.0 | 12.0 |
| அதி உயர்ந்த 30% | 47.0 | 54.0 |
| அதி உயர்ந்த 20% | 35.0 | 41.0 |
| அதி உயர்ந்த 10% | 20.0 | 27.0 |

மேற்படி தரவுகளிலிருந்து கருதப்படும் காலப்பகுதி தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய முடிவு.

1. அதிகுறைந்த வருமானக் குழுக்கள் தமது வருமானங்களில் ஒரு வீழ்ச்சியை அனுபவித்துள்ளன என்பதாகும்.
2. வருமானப் பங்கீடு மிகவும் சமமற்றதாக மாறியுள்ளது என்பதாகும்.
3. செல்வப் பங்கீடு மிகவும் சமமற்றதாக மாறியுள்ளது என்பதாகும்.
4. மொத்தவருமானம் அதிகரித்தள்ளதால் ஒவ்வொருவரும் நன்மையடைந்துள்ளனர் என்பதாகும்.
5. கிணி குணகம் குறைவடைந்துள்ளது என்பதாகும்.

10. பின்வரும் வரைபடம் நாடொன்றின் வருமானப் பங்கீடு பற்றிய லோரன்ஸ் வளையியின் அசைவினைக் காட்டுகின்றது.




A யிலிருந்து B வரையில் லோரன்ஸ் வளையியின் அசைவினைப் பின்வரும் கூற்றுக்களில் எது சரியாக விளக்குகின்றது?

1. கிணிகுணகத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
2. செல்வத்தின் மீதான வரி நீக்கப்படல்.
3. அத்தியவசியப் பொருட்கள் மீதான வரிகளில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
4. குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான மாற்றல் கொடுப்பனவுகளில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
5. பொது முயற்சி நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தல்.

11. எந்தவொரு பொருளாதாரத்தினதும் மூன்று பிரதான பேரினப் பொருளாதார இலக்குகளாக அமைவன.

1. விலையுறுதியைப் பேணல், வட்டி வீதங்களைக் குறைத்தல், மற்றும் உயர் வீத பொருளாதார வளர்ச்சியை எய்துதல்.
2. உயர்மட்ட தொழில்வாய்ப்பினைப் பேணல், பண நிரம்பலை அதிகரித்தல், மற்றும் உயர் வீத பொருளாதார வளர்ச்சியை எய்துதல்.
3. விலையுறுதியைப் பேணல், உயர்மட்ட தொழில்வாய்ப்பினைப் பேணல் மற்றும் உயர்வீத பொருளாதார வளர்ச்சியை எய்துதல்.
4. உயர்வீத பொருளாதார வளர்ச்சியை எய்துதல், தொழிலின்மையைக் குறைத்தல், மற்றும் வட்டிவீதத்தைக் குறைத்தல்.
5. உயர்வீத பொருளாதார வளர்ச்சியை எய்துதல், குறைந்தவீத பணவீக்கத்தை அடைதல் மற்றும் வட்டிவீதத்தைக் குறைத்தல்

12. ஒரு நாட்டின் இரு காலப்பகுதிக்குரிய வருமானப் பரம்பலை பின்வரும் அட்டவணை புலப்படுத்துகின்றது.

| வருமானப் பிரிவினர் | வருடம் 1 | வருடம் 2 |
|---|---|---|
| செல்வந்தர் 20 வீதத்தினர் | 54.1 | 50.1 |
| வறியோர் 20 வீதத்தினர் | 4.5 | 5.4 |
| நடுத்தரத்திலுள்ள 60 வீதத்தினர் | 41.4 | 44.5 |

மேலேயுள்ள தகவலிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய முடிவு.

1. லோறன்ஸ் வளையி ஒப்பரவு வளையியிலிருந்து விலகிச் செல்கின்றது.
2. கினிக்குணகப் பெறுமதி அதிகரித்துச் செல்கின்றது.
3. கினிக்குணகப் பெறுமதி பூச்சியத்தை நோக்கி நகரும்.
4. லோறன்ஸ் வளையி ஒப்பரவு வளையியை நோக்கி நகரும் அதேவேளை கினிக்குணகம் அதிகரிக்கும்
5. லோறன்ஸ் வளையியில் எந்தவொரு அசைவும் ஏற்படமாட்டாது.

13. இலங்கையின் சமீப ஆண்டின் மானிட அபிவிருத்திச்சுட்டியின் பெறுமானம், தலைக்குரிய வறுமைச்சுட்டியின் பெறுமானம் என்பவற்றை காட்டும் சரியான விடை?

| | மானிட அபிவிருத்திச் சுட்டி | தலைக்குரிய வறுமைச்சுட்டி |
|---|---|---|
| i. | 0.715 | 8.9 |
| ii. | 0.715 | 15.2 |
| iii. | 0.750 | 6.7 |
| iv. | 0.710 | 8.9 |
| v. | 0.757 | 6.7 |

14. உலகவங்கியின் அண்மைக்கால வகைப்படுத்தலின்படி தாழ் நடுத்தர வருமானப் பிரிவுக்குரிய தலா தேசிய வருமானம் ஐக்கிய அமெரிக்க டொலர்களில்,

1. 1045க்கு குறைவு 2. 1046 - 4125 3. 1046 - 12735
4. 996 - 3945 5. 4126 - 12735

15. நிலைபேறான அபிவிருத்திக்காக பொருளாதார வளர்ச்சிக்கு மேலதிகமாக எதிர்பார்க்கப்படுவது?

1. வறுமையைக் குறைத்தல் மற்றும் சூழல் பாதுகாப்பு
2. நியாயமான வருமானப் பரம்பல் மற்றும் பொருளாதார செயற்றிறன்
3. பொருளாதார கட்டமைப்பு மாற்றம் மற்றும் பொருளாதார உறுதி.
4. சூழல் பாதுகாப்பு மற்றும் பொருளாதார கட்டமைப்பு மாற்றம்
5. சமூக அபிவிருத்தி மற்றும் சூழல் பாதுகாப்பு.

16. ஐக்கிய நாடுகள் மானிட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணைத் தயாரிப்பதற்காக **பயன்படுத்தப்படாத** நியதி எது?

1. பிறப்பின்போது ஆயுள் எதிர்பார்க்கை.
2. பாடசாலைக் கல்விபெற்ற வருடங்களின் நடுப்பெறுமதி.
3. பாடசாலைக்கல்வியில் நிலைத்திருப்பர் என எதிர்பார்க்கப்படும் வருடங்களின் எண்ணிக்கை.
4. சிசு மரண வீதம்.
5. கொள்வனவுச் சமநிலை அடிப்படையிலான மொத்த தேசிய வருமானம்.

17. கீழே தரப்பட்டுள்ள பட்டியலில் மனித அபிவிருத்டதிச் சுட்டியில் முன்னணி வகிக்கும் ஐந்து நாடுகள் குழுவை இனங்காண்க.

1. நோர்வே, பெல்ஜியம், ஜேர்மனி, அவுஸ்ரேலியா, இத்தாலி.
2. நோர்வே, அவுஸ்ரேலியா, சுவிஸ்லாந்து, டென்மார்க், நெதர்லாந்து
3. நோர்வே, அவுஸ்ரேலியா, சுவிஸ்லாந்து, நெதர்லாந்து, டென்மார்க்
4. நோர்வே, அவுஸ்ரேலியா, சுவிஸ்லாந்து, நெதர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா
5. நோர்வே, அவுஸ்ரேலியா, ஐக்கிய அமெரிக்கா, நெதர்லாந்து, ஜேர்மனி

18. பின்வருவனவற்றுள் எது நாடொன்றின் வருமானப் பங்கீட்டுச் சமமின்மையை பெரும்பாலும் குறைக்கக் கூடும்?

1. சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
2. குறைந்த திறன் கொண்ட ஊழியர்களுக்கான சேவைக்காலத் தொழிற்பயிற்சி.
3. பாதீட்டுக் குறை நிலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
4. தொழிலற்ற வேலையாட்களைப் பயிற்றுவிப்பதற்கான நிதிகளில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
5. ஓர் ஒடுக்குமுறை வரியை விதித்தல்.

19. நாடொன்றின் சில குடித்தொகைத் தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன. (தரவுகள் மில்லியனில்)

| | |
|---|---|
| சனத்தொகை | 60 |
| தொழில் செய்யும் வயது சனத்தொகை | 50 |
| தொழிற்படையின் சனத்தொகை | 30 |
| தொழில் செய்யும் சனத்தொகை | 28 |
| தொழிலற்ற சனத்தொகை | 02 |

மேற்படி தரவுகளின் அடிப்படையில் இப்பொருளாதாரத்தில் தொழிற்படையின் பங்குகொள்ளல் வீதம் காண்க?

1. 40% ஆகும். 2. 56% ஆகும் 3. 60% ஆகும்.
4. 75% ஆகும் 5. 93.3% ஆகும்

20. இலங்கையின் பின்வரும் மாகாணங்களில்தற்போது மிகவுயர்ந்த தலைக்குரிய வறுமைக் குறிகாட்டியைக் கொண்டுள்ள மாகாணம் எது?

1. வடமாகாணம் 2. கிழக்கு மாகாணம் 3. வடமேல் மாகாணம்
4. ஊவா மாகாணம் 5. சப்பிரகமுவ மாகாணம்

21. BRICK நாடுகள் வரிசையில் உள்ளடங்கும் நாடுகள்.

1. வங்களாதேசம், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்கொரியா
2. பிறேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்கொரியா
3. வங்களாதேசம், ரஷ்யா, இந்தியா, சீன மற்றும் சிங்கப்பூர்
4. பிறேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா
5. பிறேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் மெக்சிக்கோ

22. பல்பரிமாண வறுமைக் குறிகாட்டியில் (multidimensional proverty index) கருத்திற் கொள்ளப்படும் மூன்று இடர்பாடுகள்.

1. சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத்தரம் என்பனவாகும்.
2. வருமானம், போஷாக்கு மற்றும் ஆயுள் எதிர்பார்க்கை என்பனவாகும்.
3. சுகநலன் (sanitation), சிசு மரணம் மற்றும் போஷாக்கு என்பனவாகும்.
4. எழுத்தறிவு, குடி நீர் மற்றும் பாடசாலை செல்லும் வருடங்கள் என்பனவாகும்.
5. சுகாதாரம், வருமானம் மற்றும் சொத்துக்கள் என்பனவாகும்.

23. பின்வரும் அட்டவணை பொருளாதாரமொன்றில் தரப்பட்ட காலப்பகுதியொன்றிற்குரிய குடித்தொகை மற்றும் தொழிற்படைத் தரவுகளைக் காட்டுகிறது.

| சனத்தொகை (மில்லியன்) | தொழில் புரியும் வயது சனத்தொகை (மில்லியன்) | தொழில் புரிவோர் (மில்லியன்) | தொழிலற்றோர் (மில்லியன்) |
|---|---|---|---|
| 30 | 15 | 9 | 3 |

இப்பொருளாதாரம் தொடர்பில் பங்குபற்றல் வீதமும் தொழிலின்மை வீதமும் முறையே.

1. 50% மற்றும் 20% ஆகும்
2. 60% மற்றும் 25% ஆகும்
3. 60% மற்றும் 20% ஆகும்
4. 80% மற்றும் 25% ஆகும்
5. 50% மற்றும் 25% ஆகும்

24. இலங்கையின் பிராந்திய அபிவிருத்தியில் பரவலான சமமின்மை காணப்படுகின்றது. உதாரணமாக, 2014 ஆம் ஆண்டு நாட்டினது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மேல்மாகாணத்தினது பங்கு.

1. 35% 2. 38% 3. 43% 4. 46% 5. 49%

25. பின்வரும் தொகுதியினருள் யார் கீழ் உழைப்புடைய சனத்தொகையினராகக் கருதப்படலாம்?

1. வேலை செய்ய விருப்பமுடையவர்களாக இருந்தும் தொழில்கள் எவற்றையும் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள்.
2. தொழிற்படையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலைக் கொண்டிருக்கும் வேலை செய்யும் சனத்தொகையினர்.
3. தமது இப்போதய வேலைகளிலிருந்து விலகி சிறந்த தொழில்களை நாடி நிற்கும் மக்கள்.
4. சுய விருப்பின் பேரில் மக்கள் குறைந்த வேதனங்களுக்கு வேலை செய்தல்.
5. முழு நேரமும் கடினமாக உழைத்தும் குறைந்த எல்லை உற்பத்தியைக் கொண்டுள்ள மக்கள்.

26. பின்வருவனவற்றுள் எக்காரணி ஒரு நாட்டின் தங்கியிருப்போர் விகிதாசாரத்தைக் குறைக்கும்?

1. வேலையிலிருப்போரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி
2. சாத்தியமான ஊழியப்படையில் ய்ள்ளோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு.
3. பிறப்பு எண்ணிக்கையில் அதிகரிப்பு.
4. வேலையற்றோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி
5. முதியோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு.

27. நல்லாட்சிச் சுட்டெண்ணுக்குள் உள்ளடங்காத விடயம் எது?

1. குரல் எழுப்பும் உரிமையும் பொறுப்புக் கூறலும்
2. அரசியல் உறுதிப்பாடும் வன்முறையற்ற சூழலும்
3. நீதித்துறை சுதந்திரம்
4. புத்தாக்கத்தின் அளவு
5. அரச நிர்வாக நடவடிக்கைகளின் தரம்.

28. ஒரு நாட்டின் பருமட்டான பிறப்பு வீதத்திற்கும், பருமட்டான இறப்பு வீதத்திற்கும் இடையிலான வித்தியாசம் எவ்வாறு அழைக்கப்படும்?

1. தேறிய குடிப்பெயர்ச்சி வீதம்
2. சனத்தொகை வளர்ச்சி வீதம்
3. இயற்கை அதிகரிப்பு வீதம்
4. சார்ந்து வாழ்வோர் வீதம்
5. சிசுமரண வீதம்


29. 2014ஆம் ஆண்டு இலங்கையின் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள் நாட்டு உற்பத்தியையும், தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் சரியாகக் காட்டும் விடை எது?

| | நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி |
|---|---|---|
| 1. | 80.0 பில்லியன் டொலர் | 3924 டொலர் |
| 2. | 82.8 பில்லியன் டொலர் | 3766 டொலர் |
| 3. | 80.0 பில்லியன் டொலர் | 3853 டொலர் |
| 4. | 78.5 பில்லியன் டொலர் | 4028 டொலர் |
| 5. | 100.0 பில்லியன் டொலர் | 3836 டொலர் |

30. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் 2015இல் அறிமுகப்படுத்தப்பட்ட நிலைத்து நிற்கும் அபிவிருத்தி குறிக்கோள்களுக்குள் (17) விரிவாகக் கவனம் செலுத்தப்படும் ஐந்து விடயங்களையும் கொண்ட விடை.

1. மக்கள், பூகோளம், சுபீட்சம், சமாதானம், பயங்கரவாதம்
2. மக்கள், பூகோளம், சுபீட்சம், பாதுகாப்பு, பயங்கரவாதம்
3. மக்கள், பூகோளம், சுபீட்சம், சமாதானம், உலக பங்குடைமை
4. மக்கள், பூகோளம், சுபீட்சம், பாதுகாப்பு, சிறுவர் பாதுகாப்பு
5. மக்கள், பூகோளம், சுபீட்சம், சமாதானம், முதியோர் பாதுகாப்பு

சமூகப் பாதுகாப்பு முறை




..........................................................................................................


..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

நிலைத்து நிற்கும் அபிவிருத்தி




..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

2016 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களாகிய நீங்கள் சிறந்த பெறுபேற்றினை பெற்று வாழ்வில் சிறப்புப்பெற வாழ்த்துகின்றேன்.

என்றும் உங்கள் பொருளியல் ஆசிரியர் S.ஜெயகுமார்

# SUBRA சித்தங்கேணி

## வலிமேற்கில் கலை வர்த்தக தொழிநுட்ப பிரிவுகளுக்கான தனித்துவமான நிறுவனம்

**பொருளியல்**

**S.ஜெயகுமார்**
(B.A(Hons) ECO SPI, M.A.in Eco, P.G.D.E)

**கணக்கீடு**

**A.சுபேசன்** B.B.A (Hons)

**T.விசுவராஜ்** B.B.A (Acc SPL)

**வணிகக்கல்வி**

**V.நந்தீஸ்** B.B.A (Hons), PGDE. MEd

---

**பிரத்தியேக வகுப்பு - வர்த்தகப் பிரிவு**
கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகாமை)

**பொருளியல்**

**S.ஜெயகுமார்**
(B.A(Hons) ECO SPI, M.A.in Eco, P.G.D.E)

**கணக்கீடு**

**A.T.சுரேன்** HNDA

**வணிகக்கல்வி**

**V.நந்தீஸ்** B.B.A (Hons), PGDE, MEd

தாயகம் டிஜிற்றல்
-யாழ்.பல்கலைக் கழகம் அருகில்-